உ

சிவமயம்.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகள்

அருளிச்செய்த

# காட்சிக்கண்ணி.



வாணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

65

உ

சிவமயம்.

# காட்சிக்கண்ணி.

——[*]——

## வெண்பா.

சுத்தமுறமெஞ்ஞானச் சோதியுமாய்வந்த
வித்தகனுசோமலிங்க வேளுரைத்தவுத்தமஞ்சேர்
கர்த்தனருளாங்காட்சிக் கண்ணிகளைச்சிந்தித்தால்
அத்தமுடமுத்தியுல காம்.

## சாமா-சாப்புதாளம்.

ஆணிப்பொன்னம்பலத்தே கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா
அற்புதக்காட்சியடி (1)

ஜோதிமலையொன்று தோன்றிற்றதிலொரு
வீதியுண்டாச்சுதடி அம்மா
வீதியுண்டாச்சுதடி (2)

வீதியிற்சென்றேனவ் வீதிநடுவொரு
மேடையிருந்ததடி அம்மா
மேடையிருந்ததடி (3)

மேடையிலேறினேன் மேடையிலங்கொரு
கூடமிருந்ததடி அம்மா
கூடமிருந்ததடி. (4)
கூடத்தினாடவக் கூடமேலேழ்நிலை
மாடமிருந்ததடி அம்மா
மாடமிருந்ததடி (5)
எழ்நிலைக்குள்ளு மிருந்தவதிசயம்
என்னென்றுசொல்வேனடி அம்மா
என்னென்றுசொல்வேனடி (6)
ஓர்நிலைதன்னி லொளிர்முத்துவெண்மணி
சீர்நிலமாச்சுதடி அம்மா.
சீர்நிலமாச்சுதடி (7)
பாரோர்நிலையிற் கருநீலஞ்செய்ய
பவளமாச்சுதடி அம்மா
பவளமாச்சுதடி (8)
மற்றோர்நிலையில் மரகதப்பச்சைசெம்
மாணிக்கமாச்சுதடி அம்மா
மாணிக்கமாச்சுதடி (9)
பின்னோர்நிலையிற் பெருமுத்துவச்சிர
பேர்மணியாச்சுதடி அம்மா
பேர்மணியாச்சுதடி (10)

வேரோர்நிலையில் மிரும்பவளத்திரள்
வெண்மணியாச்சுதடி அம்மா
வெண்மணியாச்சுதடி (11)
பகலோர்நிலையிற் பொலிந்தியகன்மணி
பொன்மணியாச்சுதடி அம்மா
பொன்மணியாச்சுதடி (12)
பதியோர்நிலையிற் பகர்மணியெல்லாம்
படிகமாச்சுதடி அம்மா
படிகமாச்சுதடி (13)
ஏழ்நிலைமேலே யிருந்ததோர்கம்பம்
இசைந்தபொற்றம்பமடி அம்மா
இசைந்தபொற்றம்பமடி (14)
பொற்றம்பங்கண்டேறும் போதுநான் கண்ட
புதுமையென்சொல்வேனடி அம்மா
புதுமையென்சொல்வேனடி (15)
ஏறும்போதங்கே யெதிர்ந்தவகைசொல்ல
என்னளவல்லவடி அம்மா
என்னளவல்லவடி (16)
அங்கங்கேசத்திக ளாயிரமாயிரம்
ஆகவந்தார்களடி அம்மா
ஆகவந்தார்களடி (17)

வந்துமபங்க மயக்காமனுனருள்
வல்லபம்பெற்றேனடி அம்மா
வல்லபம்பெற்றேனடி (18)
வல்லபத்தால்வந்த மாதம்பத்தேறி
மணிமுடி கண்டேனடி அம்மா
மணிமுடி கண்டேனடி (19)
மணிமுடிமேலோர் கொடிமுடிநின்றது
மற்றதுங்கண்டேனடி அம்மா
மற்றதுக்கண்டேனடி (20)
கொடிமுடிமேலாயிரத தெட்டுமாற்றுப்பெத்த
கோயிலிருக்குதடி அம்மா
கோயிலிருக்குதடி (21)
கோயிலைக்கண்டங்கே கோபுரவாயிலிற்
கூசாதுசென்றேனடி அம்மா
கூசாதுசென்றேனடி (22)
கோபுரவாயிலுட் சத்திகள்சித்தர்கள்
கோடிபல்கோடியடி அம்மா
கோடிபல்கோடியடி (23)
ஆங்கவர்வண்ணம்வேல் வண்ணஞ்செவ்வண்ணமுன்
ஐவண்ணமாகுமடி அம்மா
ஐவண்ணமாகுமடி (24)

அங்கவரெல்லாமிங் காரிவரென்ன
அப்பாலேசென்றேனடி அம்மா
அப்பாலேசென்றேனடி (25)
அப்பாலேசென்றே னங்கோர்திருவாயில்
ஐவரிருந்தாரடி அம்மா
ஐவரிருந்தாரடி (26)
மற்றவர்நின்று வழிகாட்டமேலோர்
மணிவாயிலுற்றேனடி அம்மா
மணிவாயிலுற்றேனடி (27)
கண்ணிமவ்வாயிலிற் பெண்ணோடாணாக
இருவரிருந்தாரடி அம்மா
இருவரிருந்தாரடி (28)
அங்கவர்காட்ட யணுகத்திருவாயிலில்
அன்போடுகண்டேனடி அம்மா
அன்போடுகண்டேனடி (29)
அத்திருவாயிலி லானந்தவல்லியென்
அம்மையிருந்தாளடி அம்மா
அம்மையிருந்தாளடி (30)
அம்மையைக்கண்டே னவளருள்கொண்டேன்
அமுதமுமுண்டேனடி அம்மா
அமுதமுமுண்டேனடி (31)

தாங்குமவரருளாலே நடராஜர்
சந்நிதிகண்டேனடி அம்மா
சந்நிதிகண்டேனடி (32)

சந்நிதியிற்சென்று நான்பெற்றபோது
சாமியறிவாரடி அம்மா
சாமியறிவாரடி (33)

ஆணிப்பொன்னம்பலத்தே கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா
அற்புதக்காட்சியடி (34)

வானத்தின்மீதுமயி லாடக்கண்டேன்
மயில்குயிலாச்சுதடி அக்கச்சி
மயில்குயிலாச்சுதடி (1)

தன்னைவிட்டுத்தொடங்கினேன்மன்றுடும்
வள்ளலைக்கண்டேனடி அக்கச்சி
வள்ளலைக்கண்டேனடி (2)

சாதிச்சமயச் சழக்கைவிட்டேனருட்
சோதியைக்கண்டேனடி அக்கச்சி
சோதியைக்கண்டேனடி (3)

பொய்யையொழித்துப்புறப்பட்டேன்மன்றுடும்
ஐவரைக்கண்டேனடி அக்கச்சி
ஐவரைக்கண்டேனடி (4)

காட்சிக்கண்ணி முற்றிற்று.